கல்வி மறுசீரமைப்பு மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில், மகாராஷ்டிரா, பூனே

நிபுன்பாரத் கற்றல் பயிற்சி ஆய்வு

பாடம் : தமிழ் வகுப்பு - ஐந்து

---

கற்றல் முடிவு எண் : 1 கதைகள் / கவிதைகள் போன்ற பழக்கமான நூல்கள் பற்றி பேசுதல், கேள்வி கேட்டல், பொருள், படம் மற்றும் கதாபாத்திரம் பற்றிய கருத்துகளை வெளிப்படுத்துதல். கவிதை, தெரிந்த விசயங்களை பற்றி கேள்வி கேட்டல். LM 410

ஆசிரியர் குறிப்புகள் :

- குழந்தை தொனியில், தாளத்தில் ஆசிரியர்கள் கவிதையை வாசித்துக் காட்ட வேண்டும்.
- கவிதையை வாசிக்கும் முன் கவிதையை கவனமாக கேட்கும்படி குழந்தைகளிடம் கூறவும். அதை பற்றி கேள்வி கேட்கவும்.
- ஒவ்வொரு குழந்தைக்கும் கவிதையை தனித்தனியாக காட்ட வேண்டும். அதன் அடிப்படையில் அடுத்த கவிதை கொடுக்க வேண்டும். கேள்விகள் கேட்க வேண்டும்.
- ஒரு கேள்விக்கு பதிலளிக்க ஒரு மாணவருக்கு 10 வினாடிகள் கொடுக்கவும். 10 வினாடிகளில் பதில் கூறவில்லை எனில், அடுத்த கேள்வியை கேட்கலாம்.

வாசிக்கவும் :

இமயம் முதல் குமரி வரை
இணைந்த பெரும்நாடு
எண்ணில்லா இயற்கை வளங்கள்
கொட்டிக்கிடக்கும் நாடு
கனியும் கிழங்கும் காய்கனிகளும்
கணக்கின்றி தரும் நாடு
கங்கையும் காவிரியும் பாய்ந்து
வளம் கொழிக்கும் நாடு
காவியமும் கலைவடிவமும்
காணக் கிடைக்கும் நாடு
புத்தன் காந்தி பாரதி
போற்றும் திருநாடு
பொங்கு பல சமயங்கள்
பொதுவாய் வாழும் நாடு
பழமை மிகுந்த நாகரிகம்
பண்பாடு சிறந்த நாடு
வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு
அதுவே எங்கள் பாரத நாடு!

| கேள்விகள் | பதில்கள் |
|---|---|
| 1. ‘கனி’ என்பதன் பொருள் என்ன? | பழம் |
| 2. பாடலில் வரும் நதியின் பெயர்கள் எவை? | கங்கை, காவேரி |
| 3. பாடலில் வரும் பெரியோர்கள் பெயர்கள் எவை? | புத்தன், காந்தி, பாரதி |
| 4. இப்பாடலில் வரும் வருணைச் சொல் ஒன்று கூறுக? | வளம் கொழிக்கும் நாடு |
| 5. பாரத நாட்டின் சிறப்பு ஒன்று கூறுக? | இயற்கை வளங்கள் கொட்டி கிடக்கும் நாடு போன்றவை |

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| பாடலைக் கேட்டு 4 முதல் 5 கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல் | 3 |
| பாடலைக் கேட்டு 2 முதல் 3 கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல் | 2 |
| பாடலைக் கேட்டு ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் சரியாக பதிலளித்தல் | 1 |
| பாடலைக் கேட்டு பதில் சொல்ல தயங்குதல் அல்லது எந்த கேள்விக்கும் சரியான பதில் சொல்ல கூறவில்லை. | 0 |

கற்றல் முடிவு எண் : 2 சரியான ஏற்ற இறக்கத்துடன் தெரிந்த ஒரு பகுதியை சரியான வேகத்தில் வாசித்தல்.

ஆசிரியர் குறிப்புகள் :

- ஆசிரியர் மாணவர்களுக்கு பத்தியுடன் வாசிக்க பத்தியுடன் கூடிய அட்டையை கொடுக்க வேண்டும்.
- பத்தியை கவனமாக வாசிக்கும்படி மாணவர்களிடம் கூறவும். பத்திகள் வாசித்தபின் கேள்விகள் கேட்கப்படும் எனக் கூறவும்.
- ஒரு மாணவர் ஒரு வார்த்தையை வாசிக்க 5 வினாடிகளுக்கு மேல் தடுமாறினால், அவர் அடுத்த வார்த்தையை வாசிக்கக் கூறவும்.

அடையாளம் :

1. தவறாக வாசிக்கப்பட்ட அல்லது வாசிக்காத சொற்களை ( / ) எனக் குறிக்கவும்.
2. சரியாக வாசித்த சொற்களை ( $\varnothing$ ) எனக் குறிக்கவும்.

வாசிக்கவும் :

நம் முன்னோர்கள் காலம் தொட்டு விளையாடி வரும் விளையாட்டுகள் பாரம்பரிய விளையாட்டுகள் ஆகும். கிச்சு கிச்சு தாம்பளம், பம்பரம், உந்திப்பற, கிட்டிப்புள், கயிறாட்டம், ஊதித்தள்ளு, வடமிழுத்தல், பல்லாங்குழி, ஆடு புலியாட்டம், கல்லாங்கல் போன்றவை பாரம்பரிய விளையாட்டுகளுள் சில. பாரம்பரிய விளையாட்டின் மூலம் தோழமை உணர்வு, அறிவுத்திறன், தெளிவான சிந்தனை, நினைவாற்றல் ஆகிய பண்புகள் வளர்கின்றன.

இவ்விளையாட்டுகள் வீட்டின் உள்ளேயோ, திண்ணையிலோ அல்லது முற்றத்திலோ விளையாடப்படுகின்றன. இவற்றை விளையாட விளையாட்டுத் திடல் தேவையில்லை.பொருட் செலவும் இல்லை. எளிதாக கிடைக்கும் பொருள்களைக் கொண்டு விளையாடலாம். சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் மகிழ்வோடு விளையாடுவர்.

பல்லாங்குழி பலகை பதினான்கு குழிகளைக் கொண்டது. பலகையில் உள்ள குழியில் புளியங்கொட்டை அல்லது முத்துக்களை பரப்பி விளையாடுவர். இதனை விளையாடுவதால், கணிதத் திறன், மதிநுட்பம், சேமிப்புத்திறன் ஆகிய பண்புகள் வளரும். விளையாட்டுகள் உடலுக்கு உறுதியையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் தருகிறது. நாமும் இதுபோன்ற விளையாட்டுகளை விளையாடி மகிழ்வோம்!

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| 50 முதல் 70 வார்த்தைகளை துல்லியமாக வாசித்தல் | 3 |
| 49 முதல் 25 வார்த்தைகளை துல்லியமாக வாசித்தல் | 2 |
| 10 முதல் 25 வர்த்தைகளை சரியாகப் படித்து சற்று தடுமாறி வாசித்தல் | 1 |
| சரியாக எதையும் வாசிக்கவில்லை / எதுவும் பேசவில்லை | 0 |

கற்றல் முடிவு எண் : 3 இலக்கிய தலைப்புகள், நிகழ்வுகள், படங்கள், கதாபாத்திரங்கள்,தலைப்புகள், கேள்விகள் பற்றி விவாதித்தல். அதன் பின்னால் உள்ள சிந்தனையைக் கூறுதல். இதற்காக கற்றல் முடிவு எண் 2இல் உள்ள பத்தியை பயன்படுத்தவும். LM 407

ஆசிரியர் குறிப்புகள் :

- மாணவர் கதையை படிப்பதை நிறுத்தும் போது அக்கதையை அவரிடமிருந்து பறிக்க வேண்டாம்.
- மாணவர் படித்தவுடன் கதையின் அடிப்படையில் கேள்வி கேட்கவும். 15 வினாடிகளுக்குள் பதிலளிக்க முடியாவிட்டால் ‘பதிலளிக்க வில்லை’ எனக் குறிக்கவும்.
- இரண்டு முறைக்கு மேல் கேள்வி கேட்க வேண்டாம். மாணவர் ‘எனக்குத் தெரியாது’ என்று கூறினால் 0/ என்று குறிக்கவும்.

| கேள்விகள் | பதில்கள் |
|---|---|
| 1. நம் முன்னோர்கள் காலம் தொட்டு விளையாடி வரும் விளையாட்டை எப்படி அழைப்போம்? | பாரம்பரிய விளையாட்டுகள் |
| 2. நமது பாரம்பரிய விளையாட்டுகள் இரண்டு கூறுக? | கிச்சு கிச்சு தாம்பளம், பம்பரம், உந்திப்பற, கிட்டுப்புள், கயிறாட்டம், வடமிழுத்தல், பல்லாங் குழி போன்றவை |
| 3. பாரம்பரிய விளையாட்டுகள் மூலம் எப்பண்புகள் வளர்கின்றன? | தோழமை உணர்வு, அறிவுத் திறன், தெளிவான சிந்தனை, நினைவாற்றல் |
| 4. பல்லாங்குழிப் பலகை எத்தனை குழிகளைக் கொண்டது? | பதினான்கு |
| 5. உடலுக்கு உறுதியையும், மனதிற்கு மகிழ்ச்சியையும் தருவது எது? | விளையாட்டு |

மாணவர் கூறிய சரியான பதில்களின் எண்ணிக்கை - / 5

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| பத்தியை வாசித்தபின் 4 முதல் 5 கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல் | 3 |
| பத்தியை வாசித்தபின் 2 முதல் 3 கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல் | 2 |
| பத்தியை வாசித்தபின் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் சரியாக பதிலளித்தல் | 1 |
| பத்தியை வாசித்தபின் பதிலளிக்க தயங்குதல் அல்லது எந்த கேள்விக்கும் சரியாக பதிலளிக்கவில்லை. | 0 |

கற்றல் முடிவு எண் : 4 செய்தித்தாள், குழந்தைகள் பத்திரிகை போன்றவற்றை வாசித்தல். அதனை புரிந்து கொண்டு அதுபற்றி சுருக்கமான தகவல்களை எழுதுதல். LM 407

ஆசிரியர் குறிப்புகள் :

- ஆசிரியர் மாணவர்களுக்கு வாசிக்க பத்தியுடன் கூடிய அட்டைத்தாளை கொடுக்க வேண்டும்.
- பத்தியை கவனமாக வாசிக்கும்படி கூறவும். பத்தியை வாசித்தபின் கேள்விகள் கேட்கப்படும் என்பதனையும் கூறவும்.
- ஒரு மாணவர் ஒரு வார்த்தையை படிக்க 5 வினாடிகளுக்கு மேல் தடுமாறினால் அடுத்த வார்த்தையை வாசிக்கக் கூறவும்.

அடையாளம் :

1. தவறாக வாசிக்கப்பட்ட அல்லது வாசிக்காத சொற்களை ( / ) எனக் குறிக்கவும்.
2. சரியாக வாசித்த சொற்களை ( ∅ ) எனக் குறிக்கவும்.

வாசிக்கவும் :

<u>மார்க்கெட்டில் வாகனப் போக்குவரத்தால் மக்கள் சிரமப்படுகிறார்கள்.</u>

மகாராஷ்ரா, மும்பை செப்டம்பர் 16 (நமது நிருபர்) தாதரில் ஒவ்வொரு சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் அதிக அளவில் பொருட்கள் துணிமணிகள் வாங்க மக்கள் கூடுகிறார்கள். மும்பை நகரிலுள்ள மார்க்கெட்டில் இதுவும் ஒரு பெரிய மார்க்கெட் ஆகும். தாதரைச் சுற்றியுள்ள மெயின் ரோட்டின் இரு புறமும் சிறிய கடைகள் உள்ளதால் மார்க்கெட்டில் கூட்டம் அதிகமாக உள்ளது. சாலையில் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் அதிகம் செல்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதைக் குறைக்க மாநகராட்சி நிர்வாகமும், போக்குவரத்து துறையும் முயற்சி செய்யும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மாணவர்கள் சரியாகப் படித்த சொற்களின் எண்ணிக்கை - / 70

படிக்க எடுத்துக் கொண்ட நேரம் _________ வினாடிகள்.

| கேள்விகள் | பதில்கள் |
|---|---|
| 1. செய்தியின் தலைப்பு என்ன? | மார்க்கெட்டில் வாகனப் போக்குவரத்தால் மக்கள் சிரமப்படுகிறார்கள். |
| 2. கூட்ட நெரிசலுக்கு காரணம் என்ன? | சாலையின் இருபுறமும் சிறிய கடைகள் உள்ளதால் |
| 3. கூட்ட நெரிசலை யார் கட்டுப்படுத்துவர்? | போக்குவரத்துத் துறை |
| 4. மும்பையில் இச்சந்தை அமைந்துள்ள இடம் எது? | தாதர் |
| 5. மார்க்கெட் நெரிசலை குறைக்க என்ன செய்ய வேண்டும்? | மாணவர் கூறும் சரியான பதிலை ஏற்கவும். |

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| பத்தியைப் படித்தபின் அனைத்து கேள்விகளுக்கும் சரியான பதில் கூறல் | 3 |
| பத்தியைப் படித்தபின் 2-3 கேள்விகளுக்குப் பதில் கூறல். | 2 |
| பத்தியைப் படித்தபின் ஒரே ஒரு கேள்விக்கும் மட்டும் பதில் கூறுதல் | 1 |
| கேள்விகளுக்கு பதிலளிக்க தயங்குதல். எக்கேள்விக்கும் பதிலளிக்கவில்லை | 0 |

கற்றல் முடிவு எண் : 5 எழுத்து - நிறுத்தற் குறியீடுகளுடன் குறுகிய வாக்கியங்களை எழுதுதல். LM 417

அசிரியர் குறிப்புகள் :

- எழுதக் கூறும் போது மாணவர்கள் புரிந்து கொள்ளும் உச்சரிப்பிலும் வேகத்திலும் வார்த்தைகளைக் கூற வேண்டும்.
- ஒரு வாக்கியத்தை மூன்று முறை கூற வேண்டும். 1) முதலில் கூறும் போது மாணவர்களை கேட்கச் சொல்லவும். 2) இரண்டாம் முறை கூறும் போது எழுதச் சொல்லவும். 3) மூன்றாம் முறை கூறும் போது வாக்கியங்களை மீண்டும் சரிபார்க்க கூறவும்.

எழுதவும் :

நல்லது மாணவர்களே! இவற்றுள் எவை உயிருள்ளவை?

மாடு, காகம், நாய், மனிதர்கள் உயிருள்ளவை ஐயா!

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| அனைத்து வார்த்தைகள் / வாக்கியங்களையும் சரியாக நிறுத்தற் குறியீடுகளுடன் எழுதுதல். | 3 |
| அனைத்து வார்த்தைகள் / வாக்கியங்களை எழுதி, நிறுத்தற் குறியீடுகளை எழுதாமல் விட்டால். | 2 |
| அனைத்து வாக்கியங்களையும் எழுதுதல். ஆனால் 4-5 வார்த்தைகளை சரியாக எழுதவில்லை. | 1 |
| எதையுமே சரியாக எழுதவில்லை. | 0 |

❑❑❑